# கல்லீரல் பரிசோதனை செய்து பாதிப்பை துவக்கத்திலேயே தடுக்கலாம்

## கே.எம்.சி.எச்., டாக்டர் ரா.அருள்ராஜ் விளக்கம்

**கோவை, மார்ச் 20:** கே.எம்.சி.எச்.மருத்துவமனை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ரா.அருள்ராஜ் கூறியதாவது:

இந்தியாவில் 2010ம் ஆண்டில் எடுத்த மருத்துவ ஆய்வில், இந்தியாவில் உயிரிழப்பு ஏற்படுத்தக்கூடிய 10 முக்கிய நோய்களில், கல்லீரல் நோயும் ஒன்றாகும். குடிப்பழக்கம், கல்லீரலில் கொழுப்பு படிவது, வைரஸ் பாதிப்பு ஆகியவற்றால் கல்லீரல் பாதிப்படைந்து, அதன் செயல்பாடு குறைகிறது. இதனால் உடலின் இயக்கத்தில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

குடிப்பழக்கத்தால் ஒரு நாளைக்கு 3 யூனிட்டிற்கு மேல் மது குடிக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் கல்லீரல் பாதிப்பு ஏற்படுகிறது. கல்லீரலில் கொழுப்பு படிவது (Fatty Liver), உடல் பருமன் உள்ளவர்களில் 10 சதவீதம் பேருக்கு ஏற்படுகிறது. பிஎம்ஐ (Boddy Mass Index) அளவு 30க்கு மேல் உள்ளவர்களுக்கும், சர்க்கரை, ரத்தக்கொதிப்பு அதிகம் உள்ளவர்களுக்கும் உடல் கொழுப்பு ஏற்படுகிறது. ஹெப்படிடிஸ் பி/சி ஆகிய வைரஸ் பாதிப்புகளாலும் கல்லீரல் பாதிக்கப்படுகிறது.

இத்தகைய 3 முக்கிய காரணங்களால் கல்லீரல் பாதிக்கப்படுவது தொடர்ந்தால், சிரோசிஸ் எனும் கல்லீரல் பாதிப்பு முற்றிய நிலைக்கு சென்று விடும். பின்னர் சில ஆண்டுகளில் 50 முதல் 60 சதவீத பேருக்கு கல்லீரல் முழுமையாக செயலிழந்து விடும். அப்போது மாற்று கல்லீரல் பொருத்தாவிட்டால் உயிரிழப்பு ஏற்படும்.

சிரோசிஸ் அறிகுறிகள்: மஞ்சள் காமாலை, கால் வீக்கம், வயிறு வீக்கம், உடலில் அதிக நீர் இருப்பது. ரத்த வாந்தி, நச்சுபொருள் மூளையை தாக்குவதால் அதிக தூக்கம், நினைவின்மை, சோம்பல், மயக்கமான சூழ்நிலை, உடல் சோர்வு மற்றும் தசை குறைதல் ஆகியவையாகும்.



டாக்டர் ரா.அருள்ராஜ்

கல்லீரல் பாதிப்பு ஏற்படாமல் இருக்க மது குடிப்பவர்கள், மது குடிப்பதை தவிர்க்க வேண்டும். உடல் பருமன் உள்ளவர்கள் உடல் எடையை குறைக்க வேண்டும். சர்க்கரை, ரத்தக்கொதிப்பு அளவை கட்டுப்படுத்த வேண்டும். வைரஸ் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க ஹெப்படிடிஸ் பி தடுப்பூசி போட வேண்டும்.

பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள்: மது குடிப்பவர்கள் 'எல்எப்டி' (LFT) ரத்த பரிசோதனை மற்றும் 'பைப்ரோஸ்கேன் (FIBRO Scan) பரிசோதனை மேற்கொண்டு கல்லீரல் பாதிப்பை முன்கூட்டியே கண்டறியலாம். உடல் பருமன் உள்ளவர்கள் பிஎம்ஐ (BMI) அளவு சோதனை, பைப்ரோஸ்கேன் பரிசோதனையும், மது குடிக்காதவர்கள், உடல் பருமன் இல்லாதவர்கள் ஹெப்படிடிஸ் பி / சி வைரஸ் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

உணவு கட்டுப்பாடுகளை மேற்கொண்டும் மற்றும் உரிய மருந்துகளை உட்கொண்டும் கல்லீரல் சிரோசிஸ் நோயின் பாதிப்புக்கு ஆளாவதை தவிர்க்கலாம். சிரோசிஸ் (cirrhosis) நிலை முற்றி கல்லீரல் செயலிழந்தால் மாற்று கல்லீரல் பொருத்த வேண்டும்.

**மேலும் விபரங்களுக்கு, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ரா.அருள்ராஜ், கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. போன் : +91 422 4324641, இ-மெயில் : *drarulraj@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.**

-Advt